THE HINDU TAMIL

30 SEP 2021

PAGE 3

# புதுவைப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்களுக்கு செம்மொழித் தமிழ் விருதுகள்

■ புதுச்சேரி

செம்மொழித் தமிழ் விருதுகள் பெற புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்கள் தேர்வாகியுள்ளனர்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் ஆண்டுதோறும் செம்மொழித் தமிழாய்வுக்கு சிறந்த பங்களிப்பை வழங்கிய தமிழ் அறிஞர்களுக்கும், தொல்லியல், நாணயவியல் மற்றும் இலக்கியம் முதலான சிறந்த அறிஞர்களுக்கும் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கப்பட்டு வருகிறது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதிற்காக புதுவைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாக பணியாற்றி ஓய்வுப் பெற்ற முனைவர் மருதநாயகம் மற்றும் முனைவர் ராஜன் ஆகியோர் தேர்வுச் செய்யப்பட்டுள்ளனர். இதில் முனைவர் மருதநாயகம் பல்கலைக்கழகப் பதிவாளராகவும் பணியாற்றியுள்ளார். புதுவைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி 2001 ஆம் ஆண்டு முனைவர் மருதநாயகம் ஓய்வு பெற்றுள்ளார். வரலாற்றுத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி 2020ம் ஆண்டு கே. ராஜன் ஓய்வு பெற்றுள்ளார்.



▲ மருதநாயகம்



▲ ராஜன்

இவ்விருதுக்காக தேர்வான இரு பேராசிரியர்களுக்கும் புதுவைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். "பல்கலைக்கழகத்தில் பணியாற்றி தலைச்சிறந்த தமிழ் அறிஞர்களுக்கான விருதுகளைப் பெற்றுள்ளது பல்கலைக்கழகத்திற்குப் பெருமையைச் சேர்ப்பதாகும். இதன் மூலம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றியவர்களின் தகுதி உலகம் முழுவதும் அறியப்படுவது பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

DINAMALAR

30 SEP 2021

PAGE 4

# செம்மொழி விருதிற்கு தேர்வான பேராசிரியர்களுக்கு பாராட்டு

**புதுச்சேரி, செப். 30–**

செம்மொழித் தமிழ் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள புதுச்சேரி பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்களுக்கு துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டு தெரிவித்தார்.



ராஜன்



மருதநாயகம்

செம்மொழித் தமிழாய்வுக்கு சிறந்த பங்களிப்பை வழங்கிய தமிழ் அறிஞர்களுக்கு, மறைந்த தமிழக முதல்வர் கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கப்படுகிறது.

அதேபோல, இலக்கியம், தொல்லியல், நாணயவியல் முதலிய துறைகளில் சிறந்த பங்களிப்பை அளித்து வரும் அறிஞர்களுக்கும் இவ்விருது வழங்கப்படுகிறது.

இவ்விருது, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்விருதிற்கு, புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற மருதநாயகம், வரலாற்றுத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற ராஜன் ஆகிய இருவரும், தேர்வு செய்யப் பட்டுள்ளனர். இருவருக்கும், பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங் வாழ்த்து தெரிவித்தார்.

DINA THANTHI

30 SEP 2021

PAGE 10

**செம்மொழி தமிழ் விருது:**

# பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு வாழ்த்து

புதுச்சேரி, செப்.30-
செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருதுக்காக புதுவை பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாக பணியாற்றி ஓய்வுபெற்ற மருதுநாயகம், கே.ராஜன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

விருதுபெறும் மருதுநாயகம் புதுவை பல்கலைக்கழக ஆங்கிலத் துறையில் பேராசிரியராகவும், கே.ராஜன் வரலாற்று துறையில் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.